**தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1 (ஆ) | களஞ்சிய முற்பணக் கணக்கில் விநியோகிக்கப்பட்ட இருப்பின் கிரயம் கணக்கீடு கொள்கைகளின் பிரகாரம் சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். | 1.6.1 (இ)(ii) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் ACA-5 படிவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணத்தின் கீழ் காசாக முற்பணமாக பெறுவனவுகள் ரூபா 39,800 ஆக இருந்ததுடன் SA-52 திறைசேரிப் படிவத்தில் காசாக பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 18,672,188 ஆகும். அதனால் காசாக முற்பணப் பெறுவனவுகள் படிவம் இரண்டிற்குமிடையே ரூபா 18,632,388 முரண்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் நிதிக்கூற்றல் ACA-5 படிவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணத்தின் கீழ் குறுக்குப் பதிவுகளின் மூலம் செலவு வைக்கப்பட்டமை ரூபா 20,688,652 ஆக இருந்ததுடன் SA-52 திறைசேரிப் படிவத்தில் குறுக்குப் பதிவுகளின் மூலம் செலவு வைக்கப்பட்டமை ரூபா 2,056,264 ஆனமையால் ரூபா 18,632,388 முரண்கள் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ACA-5 மற்றும் SA-52 என்ற படிவங்களுக்கிடையே | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் பணமாகவும் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலமும் காண்பிக்கப்படுகின்ற முறையில் வேறாக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ACA-5 படிவத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. பணமாக முற்பண பெறுவனவுகளின் வேறுபாடு மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலம் முற்பணப் பெறுவனவுகளின் வேறுபாடான ரூபா 18,632,388 பெறுமதி காசு நிரலில் சேர்க்கப்பட வேண்டி இருந்ததுடன் குறுக்குப் பதிவு நிரலில் குறைக்கப்பட வேண்டும். பணமாக முற்பணப் பெறுவனவுகளின் வேறுபாடுகள் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலம் முற்பண பெறுவனவுகளின் வேறுபாடான ரூபா 18,632,388 பெறுமதி காசு நிரலில் சேர்க்க வேண்டி இருந்ததுடன் குறுக்குப் பதிவு நிரலில் குறைக்கப்படல் வேண்டும். | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் காசாகவும் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலமும் பெறுவனவுகள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசாகவும் மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலமும் பெறுவனவுகளுக்கிடையே ரூபா 18,632,388 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் ACA-5 படிவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் காசாக முற்பணம் செலுத்துதல்கள் ரூபா 5,450 ஆக இருந்ததுடன் SA-52 திறைசேரிப் படிவத்தில் அப்பெறுமதி ரூபா 2,944,250 ஆகும். மேலும் ACA-5 படிவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் குறுக்குப் பதிவுகளின் மூலம் முற்பணம் செலுத்துதல்கள் ரூபா 5,770,437 ஆக இருந்ததுடன் SA-52 திறைசேரிப் படிவத்தின் பிரகாரம் மீதி ரூபா 2,831,637 ஆனமையால் ரூபா 2,938,800 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் படிவங்கள் இரண்டிற்குமிடையே காசாகவும் குறுக்குப் பதிவுகளின் மூலமும் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2,938,800 வீதம் முரண்கள் அவதானிக்கப்பட்டது. | பணமாக முற்பண செலுத்துதல்களின் வேறுபாடு மற்றும் குறுக்குப் பதிவுகளின் மூலம் முற்பணம் செலுத்துதல்களின் வேறுபாடான ரூபா 2,938,800 பெறுமதி காசு நிரலில் சேர்க்கப் படவேண்டியிருந்ததுடன் குறுக்குப் பதிவு நிரலில் கழிக்கப்பட வேண்டும்.<br><br>இது எதிர்காலத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் முற்பணத் தொகை காசாக செலுத்துதல் மற்றும் குறுக்குப் பதிவுகள் மூலம் செலுத்துதல்கள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஆ) ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது 2018 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோரில் மேலதிக பெறுவனவு கணக்கின் மீதியான ரூபா 16,891,719 இனால், 2009 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதியான ரூபா 10,030,152 தொகை, ஈடுசெய்யப் பட்டிருந்தது. அவ்வாறு ஈடுசெய்யப்பட்ட மீதி மேலதிகமாக கிடைத்த கடன்பட்டோருக்குரிய மீதியாக இல்லாதிருந்தமையால் இந்த ஈடுசெய்தல் எந்வொரு அடிப்படையுமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | PIV இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலை தாளிற்குரிய கிடைத்த தொகைக்குரிய கடன் பட்டோர் கணக்கில் குறைக்கப்பட்டு பின்னர் எஞ்சிய தொகைக்காக மேலும் கடன்பட்டோர் மீதி காணப்படாதவிடத்து இந்த கணக்கிற்கு தற்காலிகமாக உள்ளடக்கப்படுகின்றது. பின்னர் தேவையான போது இந்த கணக்கிலிருந்து கணக்கீட்டு சீராக்கங்கள் மூலம் நீக்கப்பட்டு உரிய கடன்பட்டோர் கணக்கில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அந்த வேலைத் தாளுக்காக கடன்பட்டோர் மீதியொன்று இதுவரை காணப்படாதிருந்தமையால் தொடர்ச்சியாக கடன்பட்டோரிடமிருந்து மேலதிகப் பெறுவனவாக ஐந்தொகையில் காண்பிக்க வேண்டியிருந்தமையால் 2009 ஆம் ஆண்டில் கணக்கீட்டு பிழைகளின் காரணமாக ஏற்பட்டிருந்த உள்ளபடியான கடன்பட்டோர் அல்லாத மீதியொன்றின் மூலம் இந்த கணக்கூடாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்துரைத்த மற்றும் சரியாக இனங்கண்டதன் பின்னர் கணக்கீட்டு ரீதியான வழுக்கள் மாத்திரம் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்கிடையே ஈடுசெய்யப்படல் வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கடன்பட்டோர் | கோவையில் காணப்படுகின்ற மீதிக்காக WD/04/DE/ණය කමිටුව/2021 ஆம் இலக்க 2022.03.29 ஆம் திகதிய கடிதத்தில் அங்கீகாரம் | கோவை இல்லாத மீதிக்காக அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறவேண்டியமைக் |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,941,553 ஆக இருந்த போதிலும் பதிவழிப்பதற்காக அமைச்சு செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட குழு அறிக்கையின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கடன்பட்டோரின் கூட்டுமொத்தம் ரூபா 4,045,992 ஆகும். அவ்வாறு இருக்கும் போது நிதிக் கூற்றுக்களில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 36,941,553 ஆன மொத்த மீதியும் பதிவழிக்கப்பட்டிருந்தது. | கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக 2022.04.06 ஆம் திகதிய இலக்கம் 2/2/08/08-2022 என்ற கடிதத்தில் அங்கீகாரம் கிடைத்திருந்தது. கோவை இல்லாத மீதிக்காக 2021.03.24 ஆம் திகதிய WD/04/DE/ණය කමිටුව/2021 ஆம் இலக்க கடிதம் மூலம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன். அதற்காக 2021.03.31 ஆம் திகதிய இலக்கம் 2/2/08/05-2021 என்ற கடிதத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் இந்த 02 வருடங்களின் மீதிகள் யாவற்றுக்காகவும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | கு 2021.03.31 ஆம் திகதிய இலக்கம் 2/2/08/05-2021 என்ற கடிதத்தில் அறிவிக்கப்பட்டமை யால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | களஞ்சிய முற்பணக் கணக்கில் ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் விநியோகிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் ரூபா 204,588,585 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் களஞ்சிய முற்பணக் கணக்கில் விநியோகித்தல் பெறுமதி ரூபா 204,647,488 ஆக காண்பிக்கப்பட்டமையால் இந்த இரண்டு கணக்குகளுக்குமிடையே ரூபா 58,903 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | களஞ்சிய முற்பணக் கணக்கில் விநியோகித்தல் பெறுமதியான ரூபா 204,647,488 மாதாந்தம் விநியோகிக்கும் பெறுமதி மற்றும் விநியோகிப்பதற்கான மாற்றல் பத்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் கூட்டுத்தொகையினைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.<br><br>ஆற்றப்பட்ட வேலை முற்பண கணக்கில் வெளிப்படுத்தல் தொடர்பான கூற்றில் விநியோகித்தல் பெறுமதி குறிப்பிடும் போது காகிதாதிகள் ரூபா 44,838 பெறுமதி | களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்குகளுக்கிடையே மாற்றப்படுகின்ற பொருட்களின் பெறுமதி சரியாக இரண்டு கணக்குகளுக்குமிடையே சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளடக்கப்படவில்லை. மேலும் விநியோகிப்பதற்காக களஞ்சிய முற்பணக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,065 பெறுமதியும் அந்த வெளிப்படுத்தல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. அந்த பெறுமதி இரண்டினதும் கூட்டுத் தொகையில் ரூபா 58,903 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | |
| (ii) | கிரயத்தில் 10 சதவீத பெறுமதி சேர்க்கப்பட்டு களஞ்சிப் பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டிய இருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட இருப்பின் கிரயம் ரூபா 182,558,190 ஆக இருத்தல் வேண்டும். எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு விநியோகித்தல் கிரயம் ரூபா 174,236,395 ஆனமையால் மீளாய்வாண்டில் இருப்பு விநியோகித்தல் பெறுமதி ரூபா 8,321,795 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அந்த விநியோகித்தல் பெறுமதிகளுக்கிடையே வேறுபாட்டிற்கு 2023 ஆம் ஆண்டின் களஞ்சிய முற்பணக் கணக்கு தயாரிக்கும் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட இருப்பு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை.**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்துடன் சில பதிவேடுகள் முறையாகவும், நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) **இழப்பு நட்ட பதிவேடு** | | |
| இலக்கம் PD-9101 என்ற வாகனத்தின் 2021.11.29 ஆம் திகதி ஏற்பட்டிருந்தத விபத்து தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. | இலக்கம் PD-9101 வாகனத்தின் 2021.11.29ஆம் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக தற்காலிக தகவல்கள் 2023.02.20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இழப்பின் பெறுமதி ரூபா 43,456 ஆக இருந்ததுடன் அந்த தொகை காப்புறுதியிலிருந்து தீர்க்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நாளதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (ii) **ஆளணி சம்பள பதிவேடு** | | |
| ஆளணி சம்பள பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக ஆளணி சம்பள பதிவேடு பேணிச் செல்லப் படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது ஆளணி சம்பள பதிவேடு பேணிச் செல்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 453 இன் பிரகாரம் 17 ஆவது திறைசேரி மற்றும் கணக்காய்வு படிவத்தின் படி ஆளணி சம்பள பதிவேடு பேணிச்செல்லப்பட ல் வேண்டும். |
| (iii) **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| பொறுப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. பொறுப்புக்கள் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டிற்காக ஆளணி பொறுப்புக்கள் பதிவேடு பேணிச் செல்லப் படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக பொறுப்புக்கள் பதிவேடு பேணிச் செல்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடு தினந்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்பு பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் பெறுமானத்தேய்வு நிதியத்திலிருந்து செய்யப்பட்ட ரூபா 1,682,924 ஆன செலவினங்களுக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இந்த கணக்குகள் தொடர்பான விரிவான தகவல்கள் எங்களிடம் காணப்படுகின்ற கோவைகளின் கண்டறிய முடியாதுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய விரிவான பட்டோலைகளில் பேணிச் செல்லல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்குரிய ரூபா 53,161,909 பெறுமதியான கடன்பட்டோரில் பதிவழிப்பதற்குரிய எந்தவொரு அங்கீகாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கடன்பட்டோர் கணக்கின் சீராக்கத்தின் மூலம் அகற்றுவதற்காக மேற்கொள்ளுவதற்காக உரிய அங்கீகாரத்தின் பிரதி இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோருக்கான உரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16,467,739 பெறுமதியான இயந்திர பொறிமுறைகள் மற்றும் ரூபா 765,283 ஆன தளபாட உபகரணங்களுக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் | இது தொடர்பான விரிவான தகவல்கள் எங்களிடம் காணப்படுகின்ற கோவைகளின் மூலம் கண்டறிய முடியாதிருந்ததுடன் இது கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியைக் கண்டறிதல் அந்த ஆண்டுகளில் ஆற்றப்பட்ட வேலை முற்பணம் இறுதி கணக்கின் மூலமாகும். அதல் | நிதிக் கூற்றுக்களின் மீதிகளுக்காக உரிய விரிவான பட்டோலை பேணிச்செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்த இயந்திரப் பொறிமுறைகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | விரிவான தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. | |
| (iv) | நிதிக் கூற்றுக்களில் ACA-6 வடிவம் மற்றும் SA-82 திறைசேரி படிவங்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 284,896,200 பெறுமதியுடைய அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் உபகரணங்கள், கணனி உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், தொழில்நுட்ப மற்றும் உற்பத்தி உபகரணங்களின் பௌதீக ரீதியில் இனங்காண்பதற்கு முடியுமான வகையில் குறியீட்டு இலக்கம் இடாமையின் காரணமாக திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் ACA-6 வடிவம் மற்றும் SA-82 படிவத்தில் கூட்டுத் தொகையாக உள்ளடக்கப் படுவதுடன் அது விரிவாக சிகாஸ் நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்களை கணக்கு வைக்கும் போது தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் குறியீட்டு இலக்கம் இடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அதிகாரம் இன்றிய தொழிற்படு நட்டம்.

கீழே குறிப்பிடப்படுகின்ற தொழிற்படு நட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படாமை இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 513 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் (31003) அதிகாரம் பெறாக தொழிற்படு நட்டம் ரூபா 70,758,133 ஆகும். இது தொடர்பாக 2022 நவம்பர் 30 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த இலாப நட்டக் கணக்கின் பிரகாரம் தேறிய நட்டம் ரூபா 32 மில்லியன் ஆக இருந்தமையும் 2022 திசெம்பர் 31 இல் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதியாண்டு முடிவடைவதற்கு முன்னர் நிதி ஏற்பாட்டை அங்கீகரித்து தொழிற்படு நட்டத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மதிப்பிடப்பட்ட நட்டத்திற்காக ரூபா 150 மில்லியன் நிதி ஏற்பாடு 310–2–1-0-1701 செலவின விடயத்தில் வழங்குமாறு 2022 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 2C/ සීමා සංශෝධන /365/02/(2022-2025) என்ற தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிட்ட தொழிற்சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் (பதில் கடமை) கடிதத்தில் கோரப்பட்டிருந்த போதிலும் 2023 மே 19 ஆம் திகதி வரையிலும் தொழிற்படு நட்டத்தை தீர்ப்பதற்காக அந்த நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 1,191,508 பெறுமதியான பொறுப்புக்கள் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் திசம்பர் மாதத்திற்குரிய நீர், மின்சாரம், தொலைபேசி பட்டியல்களை செலுத்துதல், பிரிவுகளுக்கு 2023 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் கிடைத்தமையினால் 2023 சனவரி இரண்டாம் வாரத்தில் அந்த நீர், மின்சாரம், தொலைபேசி பட்டியல்களின் உள்ளபடியான செலவினம் 2022.12.31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் அறிக்கையில் உள்ளடக்குதல். நடைமுறையில் வசதியீனமாக இருந்தமையால் அதற்கு அண்ணளவான மதிப்பீட்டுப் பெறுமதி பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் கூற்றில் ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்படவேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய இருந்தமையும் அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது காலாண்டு ரீதியில் மீளாய்வு செய்து எழுத்து மூலம் மேற்கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது தொடர்பான செயல்முன்னேற்றம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய இலக்கம் 118 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் இடமாற்றலாகிச் சென்ற | இந்த உத்தியோகத்தரின் கடன் மீதி ஒரே தடவையில் செலுத்துமாறு அறிவித்து கொழும்பு மாநகர சபைக்கு 2023 மார்ச் 09 ஆம் | கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியில் இடமாற்றலாகிச் சென்ற அலுவலகத்திலிருந்து ஒரே தடவையில் அறவிடல் வேண்டும். எனினும் 2016.04.11 ஆந் திகதி கொழும்பு மாநகர சபைக்கு இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டியிருந்த ரூபா 138,300 ஆன இடர்கடன் மீதி, 2022 சனவரி மாதம் முதல் தவணையாக அறவிடப்படுகின்ற போதும் 2022 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் தவணைப் பணம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | திகதிய இலக்கம் 2P/විවිධ ණය/2023/01/09 என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த கடன் மீதியை அறவிடுதவற்காக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேண்டும். |
| (ஆ) | ஏதாவது உத்தியோகத்தர் ஒருவர், கடன் பணத்தை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முன் ஓய்வு பெற்றுச் செல்வாராயின் உத்தியோகத்தரின் பணிக்கொடை பணத்திலிருந்து அல்லது அவ்வாரில்லையாயின் உத்தியோகத்தரின் மாதாந்த ஓய்வூதிய சம்பளத்தில் இருந்து நிலுவைக் கடன் தொகை அறவிட வேண்டி இருந்த போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்றுச் சென்ற 03 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சினைக் கடந்திருந்த 13 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,312,931 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திறனின்மையின் அடிப்படையில் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதி அந்த உத்தியோகத்தர்களுக்கு 55 வயது பூர்த்தி அடைந்த பின்னர் ஓய்வூதிய பணிக்கொடை மூலம் தீர்த்துவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 145,650 கடன் தொகை ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை பதிவழிக்குமாறு அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் அரச நிதி திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் கடன் மீதியை அறவிடுவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் இதனை அறவிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு எமது நிறுவனத்தின் சட்ட உதவியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சேவையை விட்டுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 573,080 ஆன கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து, 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 186,410 ஆன கடன் மீதி 01 முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து அறவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி காணப்படுகின்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து தற்போது தவணையாக செலுத்தப்படுகின்றது. மிகுதி 09 உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான மூன்று உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து தற்போது தவணைப் பணம் செலுத்தப்படுவதுடன் ஒரு உத்தியோகத்தரின் முகவரியைக் கண்டறிய முடியாதிருந்தது. ஏனைய உத்தியோகத்தர்களினாலும் சில தவணைகள் செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை விரைவாக செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 நிதிச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 536,724,700 ஆக இருந்ததுடன் 01 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் தீர்த்து வைக்கப்படாத கடன் பட்டோர் மீதி ரூபா 310,357,322 ஆனமையால் கடன் பட்டோர் மீதியை தீர்த்துவைத்தல் மிகவும் நலிவான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்தக் கடன்பட்டோர் மீதியை இனங்காண்டு நடவடிக்கை எடுப்பதற்காக தற்போது பேணிச் செல்லப்படுகின்ற கடன்பட்டோர் மீதியை ஒப்பீடு செய்யும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு முறையான மற்றும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br><br>(i) நிதிப் பிரமாணம் 571 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியின் போதும் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | கணக்காய்வின் ஆலோசனையின் படி எதிர்காலத்தில் காலாவதியான வைப்பு பட்டியல் ஒன்று அரையாண்டுக்கு ஒரு தடவை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதை முகாமைத்துவத் தால் உறுதிப்படுத்துத ல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1, 2.2, 2.3, 2.4, 2.5 ஆம் பந்திகள் | 2020 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் இலத்திரனியல் அரச பெறுகை முறையில் பதிவு செய்தலை உள்ளடக்கிய பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | இலத்திரனியல் அரச பெறுகைகள் மற்றும் தொடர்புடைய செயலகத்தின் மூலம் வழங்கப்பட்ட பயிற்சிகளுக்கு இணையாக மிகுதி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் பெறுகை முறைமை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோர் 02 ஆம் திகதிய இலக்கம் 05/2020 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி. | பழுதுபார்க்கப்பட வேண்டிய வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக 2021 சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் ஆக்கபூர்வமானதாகவுள்ள வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக நிதி ஏற்பாடை கோருவதற்கான படிவம் தயாரித்து அமைச்சி செயலாளரின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது அமைச்சினால் கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பழுதுபார்க்கப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2017 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 72,379,000 ஆன வாகனங்கள் மற்றும் ரூபா 278,543,676 ஆன இயந்திர உபகரணங்கள் தொடர்பாக திறைசேரி கொம்ட்றோலர் ஜெனரலுக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | இயந்திர உபகரணங்கள் மற்றும் உற்பத்தி உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக கொம்ட்றோலர் ஜெனரல் அலுவலகத்திலிருந்து விசாரணை செய்யும் போது அந்த அறிக்கை தற்போது சமர்ப்பிப்பித்தல் தேவையற்று இருந்ததாக அறிவிக்கப்பட்டமையா ல் கணக்காய்வு ஐயவினால் காண்பிக்கப்பட்டுள்ள அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை . | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சொத்துக்களின் விபரங்கள் கொம்றோலர் ஜனராலிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 13.2 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இலக்கம் 41-9170 என்ற வாகனம் விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் பிரகாரம் இந்த வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கு மதிப்பீட்டு சபை நியமிக்கப்பட்டுள்ளதுட ன் இந்த பணிகள் தொடர்ந்தும் செயற்படு நிலையில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்காக இனங்காணப்பட் ட வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்துவைக்கப்படாத கேள்வி வைப்பு மீதி ரூபா 848,563 ஆக இருந்ததுடன் அந்த மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாத கேள்வி வைப்பு மீதிகளுக்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பி அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தீர்த்துவைக்க முடியுமான வைப்பு மீதிகளை இனங்கண்டு விரைவாக தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 7042729 என்ற வங்கிக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 167,145 பெறுமதியான 06 மாதங்களுக்கு மேல் காலம் கடந்திருந்த போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 21 காசோலைகள் காணப்பட்ட போதும் அது தொடர்பான நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகள் திகதியை நீடித்துக் கொள்வதற்கோ அல்லது உடனடியாக ஓய்வுபெறச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் உரிய உத்தியோகத்தரின் பொறுப்பாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய கலாசார நிதியத்திற்காக ரூபா 32,391,346 பெறுமதியான 191 மின் விளக்கு தூண்களை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,707,512 பெறுமதியான 17 மின்சார விளக்கு தூண்கள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டமையால் பௌதீக செயல் முன்னேற்றும் 9 சதவீதமாக இருந்தது. எஞ்சியுள்ள சீன வட்டி விளக்குக் தூண்களின் ஒரு பகுதி, கண்ணாடி பெட்டிகள் மற்றும் அலுமினிய பகுதிகள் போன்ற துணைப் பாகங்கள் 01 வேலைத்தளம் மற்றும் வேலைத்தள இலக்கம் 06 இல் விளைவற்று காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | மத்திய கலாசார நிதியத்தால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந் ததுடன் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முற்பணத் தொகை வழங்காமையின் காரணமாக கட்டளைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவில்லை. | முறையான உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் அமுல்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலையில் தயாரிக்கக்கூடிய 20 கட்டில்கள் (Adjustable Bed) தயாரித்தல் ரூபா 400,000 பெறுமதியான செயற்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு தயாரிக்கக்கூடிய 20 கட்டில்கள் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இயலுமான வரை அந்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய காலப் பகுதியில் ஆரம்பித்து ஆரம்பித்து சரியான செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்காக தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 104,412,899 ஆன மதிப்பீட்டிற்கு தபால் திணைக்களம் இணங்கி 2018 திசெம்பர் 31 இல் ரூபா 3,795,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய நிர்மாணத்திற்கு உத்தேசிக்கப்பட்ட காணி பின்னர் பொருத்தமற்றதாக இருந்தமை 2019 சனவரி 13 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது உறுதிப்படுத்தப்பட்டமையால் புதிதாத தயாரித்த திட்டத்தின் பிரகாரம் வேறொரு இடத்தில் நிர்மாணிப்பதாக | இந்த செயற்திட்டத்திற்குரிய திட்டத்தை தயாரிக்கும் போது உரிய இடத்தில் நிலத்தின் மண் தொடர்பான அறிக்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையுடனான நிலைமையின் காரணமாக சில இடங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் மூன்று மாடிகளுக்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த நிர்மாணம் ஒரு மாடி வரை குறைத்து நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் வேலி நிர்மாணித்தல் போன்ற சிறிய நிர்மாணங்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தைக் கையேற்றதன் பின்னர் காலப் பகுதியல் அமுல்படுத்துவதற்கு மற்றும் உரிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டமையும் ரூபா 10,710,572 தொகை 2019 மார்ச் 14 ஆம் திகதி மற்றும் ரூபா 7,694,000 தொகை 2020 மார்ச் 06 ஆம் திகதியும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 22,199,572 தொகை தபால் திணைக்களத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் அளவாக இருந்ததன் அடிப்படையில் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கோ அல்லது வழங்கப்பட்ட பணத்தை மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் எல்லேவேவ வான் கதவை நிர்மாணித்து பொருத்துவதற்காக மீளாய்வாண்டிற்குரியதாக இலக்கிடப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 14,178,200 ஆக இருந்ததுடன் பௌதிக செயல் முன்னேற்றம் 5 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | 2021, 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மூலப் பொருள் அசாதாரணமாக விலை உயர்வடைந்ததன் அடிப்படையில் மதிப்பீட்டை நாளதுவரையாக்கி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பணிகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தில் மதிப்பீடு நாளதுவரையாக்கி அமுல்படுத்துவதற்கும், உரிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊவா குடா ஓய நீர் தேக்கத்திற்காக வான் கதவை பொருத்துவதற்காக ரூபா 12,708,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடைய செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 20 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | ஊவா குடா ஓய நீர் தேக்கத்தின் சிவில் பொறியியல் நீர்மாணம் தற்போது முடியாதிருந்ததுடன் சிவில் பொறியியல் ரீதியான நிர்மாணங்கள் முடிவடைந்த பின்னர் எந்திர பொறியியலாளர் பணிகள் ஆரம்பிப்பதற்கு தீர்மனிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கும் உரிய செயலாற்றலை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்குரிய 37 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுடன் அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள 01 றூட் 08.87 பேர்ச் நில அளவில் அமைந்துள்ள பீப்பாய் கொட்டகையும் பயனற்றுக் காணப்பட்டது. | இந்த வீடுகளில் அநேகமானவை நீர் வழிந்தோடும் பிரச்சினைகள் சமயலறைக்குள் நீர்க் கசிவு, குளியல் அறைகளில் நீர் கசிவுகளின் பிரச்சினைகள் மற்றும் மின்சார இணைப்புக்களில் கசிவுகள் என்ற பிரச்சினைகள் உள்ளது. பீப்பாய் கொட்டகைக்குரிய நிலம் தற்போது பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் கடமை மாற்றங்களின் போது தங்குமிடத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் ஆதனங்களை தயாரித்து பயன்பாட்டிற்கு எடுத்தல் மற்றும் விளைவற்றுக் காணப்படுகின்ற காணிகளை பயன்டிற்கு ஈடுபடுத்துவதற்கு முடியுமான முறையில் அமைத்தல் வேண்டும். |
| (ஆ) | எல்லை மதில் அல்லது நிலையான வேலியினை அமைத்து திணைக்களத்திற்கு சொத்தமான காணிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரசாங்க தொழிற் சாலைகளில் ஊழியர் வீடுகள் அமைந்துள்ள குறை காணிகள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற எஞ்சிய 01 ஏக்கர் 03 றூட் 11 பேர்ச் நிலப் பகுதி அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. | இந்த அனுமதியற்ற கைப்பெற்றல்கள் 2021 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டமை தெளிவாக இருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் பெயர் பதிவேடு கொலன்னாவை பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற குடியிருப்பாளர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து திணைக்களத்திற்குரிய சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசங்க தொழிற்சாலை திணைக்களம் அமைந்துள்ள காணியையும் உள்ளடக்கிய திணைக்களத்திற்கு சொந்தமான கூட்டுமொத்தமான 24 ஏக்கர் 01 றூட் 1.87 பேர்ச் அளவான மூன்று காணிகளுக்காக உரித்துறுதி திணைக்களத்திடம் காணப்படாதிருந்ததுடன் நில அளவையாளர் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளரால் உரித்தை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய அளவிடல் கட்டளை கொலன்னாவ பிரதேச செயலாளரின் மூலம் அனுப்பப்பட்டுள்ளதுடன் ஹோமாகம நில அளவையாளர் அலுவலகம் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும் இன்னும் உரித்துறுதி வழங்கப்படவில்லை. | திணைக்களத்திற்குரியதாக தீர்த்தல் காணிக்காக உரித்துறுதி பெற்றுக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | களஞ்சிய முற்பணக் கணக்கின் கீழ் C பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 2,689,162 பெறுமதியான 285 விடயங்கள், I பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 24,591,684 பெறுமதியான 166 விடயங்கள் மற்றும் A பிரிவில் ரூபா 16,964,968 பெறுமதியான 281 விடயங்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் முதல் விநியோகிக்கப்படாமல் காணப்பட்டது. இதன் காரணமாக களஞ்சியத்தை பேணிச் செல்லும் கிரயத்தை செய்வதற்கு களஞ்சியங்களில் இடவசதிகளை ஏற்படுத்துவதற்கும், இருப்புக்கள் பரிசோதனைக்காக ஊழியம் மற்றும் காலங்கள் அநாவசியமாக | இந்த இருப்பு விடயங்கள் தற்போது காலாவதியாகி இருந்ததுடன் நிறுவனத்தின் அவசர தேவைகளுக்காக இந்த இருப்பு விடயங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.<br>மேலும் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது வேலைத் தலங்களுக்காக பொருட்கள் விநிகித்தல் குறைவாக இருந்தது. | முகாமைத்துவத்தால் இந்த இருப்புக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக திட்டம் முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவசியமற்ற முறையில் செலவிடுவதற்கும், இருப்புக்கள் காலாவதியாகியதன் காரணமாக அவற்றின் பெறுமதி குறைவும் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மெந்திஸ் வத்தையில் 03 ஊழியர் வீடுகள் அமைந்துள்ள காணியில் 01 ஏக்கர் 03 றூட் 11 பேர்ச் மிகுதிக் காணிப் பிரதேசம் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த 03 வீடுகளுக்கிடையே நடுவில் அமைந்துள்ள வெற்றி நிலப் பிரதேசம் அந்த வீடுகளுக்கு வருகின்ற வாகனங்களை திருப்புவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. | சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுக்கும் திட்டம் முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக ஆளணி சம்பள செலவின தொகுதிக்காக ரூபா 97 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 257,030 ஆக இருந்தது. | சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகள் நாடு தழுவிய மற்றும் ஒன்றிணைந்த சேவைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளதுடன் அமைச்சரவை மீளாய்விற் குழுவிற்கும் சமர்ப்பித்து தேவையான புதிய ஆட்சேர்ப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நிலைமையினைக் | திணைக்களத்தினால் அவசிய தேவையின் அடிப்படையில் வெற்றிடயங்களை நிரப்புவதற்கோ அல்லது ஊழியர் எண்ணிகையைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ------- | ------- | ------- | ------- |
| சிரேஷ்ட நிலை | 31 | 18 | 13 |
| மூன்றாம் நிலை | 10 | 02 | 08 |
| இரண்டாம் நிலை | 282 | 149 | 133 |
| ஆரம்ப நிலை | 446 | 180 | 266 |
| ஏனையவை | - | - | - |
| | ------- | ------- | ------- |
| மொத்தம் | 769 | 349 | 420 |
| | ==== | ==== | ==== |

திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 769 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 349 ஆகும். அதன் பிரகாரம் 420 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையின் பிரகாரம் பதவியணியினர் எண்ணிக்கையைத் திருத்துவதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கவனத்திற் கொண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தினால் ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தற்போது இருக்கின்ற ஊழியர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்புவதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற செலவின பொறுப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.